செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்க எண்ணிக்கைகள்: 85 நாள்: 07.04.2025

# தமிழ் அகப்பொருளிலக்கண மரபு

## *Akam* Tradition of Tamil

## பயிலரங்கம் - 04

## (14.5.2025 - 23.5.2025)

## அறிவிப்பும் அழைப்பும்

என்றுமுள தென்றமிழின் தனிச்சிறப்புகளுள் ஒன்று அதன் பொருளிலக்கண மரபாகும். இப்பொருளிலக்கணத்தை அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாகப் பகுப்பர். இதில் அகப்பொருளிலக்கண மரபைக் குறித்து மட்டும் சிந்திப்பதை இப்பயிலரங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் அனுபவிக்கும் இன்பத்தினைப் பற்றிக் கூறுவது அகப்பொருளாகும். பிறரிடம் கூற முடியாததாலும் உள்ளத்திலேயே நினைத்து அனுபவிக்கத் தக்கதாய் இருப்பதாலும் இதற்கு அகப்பொருள் என்னும் பெயர் உண்டாயிற்று. தமிழ் என்னும் சொல்லுக்குக் கூட அகப்பொருள் என்னும் பொருள் உண்டு.

கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், களவு, கற்பு, கூற்றுகள், உள்ளுறை, இறைச்சி ஆகியவை அகப்பொருள் கோட்பாட்டில் இன்றியமையாதவை ஆகும்.

சங்க இலக்கிய அகப் பாடல்களை விளங்கிக் கொள்ளவும் பழந்தமிழரின் வாழ்வியலைப் புரிந்துகொள்ளவும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் பெரிதும் உதவுகிறது. தொல்காப்பியத்தைத் தொடர்ந்து இவ்வகப்பொருளிலக்கண மரபு இறையனார் களவியல், வீரசோழியம், தமிழ்நெறி விளக்கம், களவியல் காரிகை, நம்பி அகப்பொருள், மாறன் அகப்பொருள், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம் என்னும் நூல்களின் வழியாகக் காலந்தோறும் விளக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அகபொருளிலக்கண மரபை ஆய்வாளர்கள் ஆழமாக அறிந்துகொள்ளும் நோக்கில் இப்பயிலரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் மரபிலக்கண அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் தமிழியல் துறையில் முனைவர் பட்ட / ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – **40**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **14.5.2025** முதல் **23.5.2025** முடிய **10** நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00** & மாலை **2.00 - 5.00.**
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை **https://forms.gle/RrWcEhu9nZZ3FRW77** என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **01.5.2025** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **02.5.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் **38** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**